**தலைப்பு 119 – மின்சக்தி அமைச்சு**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

மின்சக்தி அமைச்சின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1)ஆம் பிரிவின் பிரகாரம் மின்சக்தி அமைச்சிற்கு சமர்ப்பிக்கப்படும் இந்நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் 2022 யூன் 03 இல் பிரதம கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2)ஆம் பிரிவின் பிரகாரம் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு 2022 ஒக்தோபர் 26 ஆந் திகதி வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் சமர்ப்பிக்கப்பட வேண்டிய கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மின்சக்தி அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும், கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு**

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று இன்றி நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் ஆகியன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சினால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அம்முறையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

**1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் நான் பின்வரும் விடயங்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாகவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரியதாக நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

**2. நிதி மீளாய்வு**

**2.1 முகாமைத்துவச் செலவினம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வீரமன் நடைமுறையின் தலைப்புகளின் கீழ் 05 மீண்டெழும் செலவின விடயங்களிற்காக ரூபா 3,850,000 உம், 02 செலவின ரூபா 2,930,000 உம் மற்றும் குறை நிரப்பு ஏற்பாடுகளின் கீழ் 07 மூலதன செலவின விடயங்களிற்காக ரூபா 4,751,362,000 உமாக மொத்த ஏற்பாடுகள் ரூபா 4,758,142,000 ஆகும். இது அந்த செலவின விடயங்களிற்காக மதிப்பிடப்பட்ட மொத்த பெறுமதி 18,160 சதவீதமாக இருந்தது. | தேசிய பாதீட்டு திணைக்களத்தால் அனுமதிக்கப்பட்ட பாதீட்டு மதிப்பீடுகளில் ஒதுக்கீடுகளில் வரைவு மதிப்பீட்டில் தேவைப்பட்ட ஒதுக்கீட்டு வரையறைகள் ஒதுக்கப் பட்டிருக்கவில்லை. அத்துடன் செலவின மதிப்பீடுகள் தயாரிக்கும் நேரத்தில் சில செலவினங்கள் முன்னுணரப்பட்டது. FR 66 மற்றும் குறைநிரப்பு ஏற்பாடுகளின் கீழ் செய்யப்பட்ட ஏற்பாடுகள் எதிர்பராத காரணங்களால் சொல்ல முடியாதிருந்தது. | சரியான பாதீட்டு மதிப்பீடுகளை செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் தலைப்புகளின் கீழ் 04 செலவின தலைப்புகளிற்காக செய்யப்பட்ட ரூபா 3,350,000 ஆன மொத்த தேறிய ஒதுக்கீடு பயன்படுத்தப்படாமல் திருப்பிச் அனுப்பப்பட்டதுடன் 2021 செப்தெம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானப் பிரகாரம் மூலதன செலவினம் நிறுத்தப் பட்டிருந்தமையால் 69 சதவீதம் திருப்பி அனுப்பபட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றோம். | -மேற்படி- |

| | | | |
|---|---|---|---|
| (இ) | நாட்டில் நிலவிய கோவிட் 19 நோய் தொற்று காரணமாக 15 மீண்டெழும் செலவினங்களிற்கான ரூபா 46,700,000 ஆன ஒதுக்கீட்டில் ரூபா 36,563,675 ஆன தொகை திருப்பி அனுப்பபட்டிருந்தது. இந்த சேமிப்புகள் 54 சதவீதம் முதல் 100 சதவீதமான வீச்சில் இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றோம். | -மேற்படி- |
| (ஈ) | 05 மூலதன செலவினங்களிற்காக ரூபா 284,500,000 ஆன மொத்த ஒதுக்கீட்டில், 2021 செப்தெம்பர் 07 ஆந் திகதிய அமைச்சரவை தீர்மானப் பிரகாரம் மூலதன செலவினம் இடை நிறுத்தப் பட்டிருந்தமை மற்றும் கோவிட் 19 நோய் தொற்று காரணமாக ரூபா 51,546,733 ஆன மொத்தம் திருப்பியனுப்பட்டடிருந்தது. மிகுதி 10 சதவீதம் முதல் 100 சதவீதமான வீச்சில் இருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றோம். | ஏற்பாடுகளின் சரியான டு மதிப்பீடு மற்றும் பயன்படுத்தல் என்பன பிரமாணத்திற்கமைய செய்யப்பட வேண்டும். |
| (உ) | அமைச்சானது வருடாந்த மதிப்பீட்டில் செலவின விடயம் ஒன்றின் கீழ் செய்யப்பட்ட ரூபா 40,000,000 தொகையில் சூரிய மின்சக்தி, காற்றலை மற்றும் நீர் மின்சார செயற்திட்ட அபிவிருத்திற்கு இராஜாங்க அமைச்சிற்கு ரூபா 28,000,000 ஆன ஒதுக்கீடு வழங்கியிருந்தது. வருடாந்த சந்தா பங்களிப்பு கொடுப்பனவிற்காக உரிய விலை ப்பட்டியல் சமர்ப்பிக்காமையால் இருக்கின்ற ரூபா 12,000,000 ஆன ஒதுக்கீடு முழுமையாக திருப்பப்பட்டிருந்தது. | கணக்காய்வு அவதானிப்புடன் உடன்படுகின்றோம். | -மேற்படி- |

## 2.2 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடனான இணங்காமைகள்

கீழே பகுப்பாய்வு செய்யப்பட்டவாறு மாதிரிச் செவ்வை கணக்காய்வு ஒதுக்கீட்டின் போது சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கான தொடர்பு | கணக்காய்வு அவதானிப்பு<br>இணங்காமை | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலகள் அமைச்சின் 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 மற்றும் 05/2008(1) ஆம் இலக்க சுற்றறிக்கைகள் | மீளாய்வாண்டின் இறுதி வரையும் பொது மக்களிற்கு அதிகளவான வினைத் திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் சேவைகளை வழங்குவதற்கு தேவையான பின்னணியை உருவாக்குவதற்கு அமைச்சின் குடியுரிமை / நலன்புரி பட்டயம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | சுற்றறிக்கை பிரகாரம், அமைச்சின் குடியுரிமை / நலன்புரி பட்டயம் அமைச்சு செயலாளரால் தயாரிக்கப்பட்டு அனுமதி பெறப்பட்டிருந்தது. | உரிய சுற்றறிக்கைக்கு அமைய குடியுரிமை / நலன்புரி பட்டயம் இணங்கி அமுலாக்கப்பட வேண்டும். |
| (ஆ) பொது நிர்வாக மற்றும் உள்நாட்டு அலுவலகள் அமைச்சின் 2008 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க சுற்றறிக்கை | (i) நிறுவனம் மனித வள அபிவிருத்தி திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் சுற்றறிக்கைப் பிரகாரம் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்களை உள்ளடக்கி திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | அமைச்சு செயலாளரின் அனுமதி பெறுவதற்கு 2021.12.03 இல் நடைபெற்ற செயலமர்வில் சமர்ப்பிக்கப்பட்ட ‘‘மனிதவள அபிவிருத்தி திட்டம் தயாரித்தலிற்கான வழிகாட்டல்’’ பிரகாரம் அமைச்சரவை மனித வளத் திட்டம் -2022 தயாரிக்கப்பட்டது. | சுற்றறிக்கை பிரகாரம், மனிதவளத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். |
| | (ii) அமைச்சில் வேலை செய்கின்ற சகல உத்தியோகத்தர்களும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப் பட்டிருக்கவில்லை | பதில்கள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கமைய செயற்பட வேண்டும். |
| (இ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணங்கள் | | | |
| (i) நிதிப்பிரமாணம் 756(6) | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சகல கணிப்பீட்டு சபை பரீட்சிப்பு அறிக்கைகளும் முன்வைக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளின் அமைச்சின் வாகனங்கள் சம்பந்தப்பட்ட கணிப்பீட்டுச் சபை அறிக்கைகள் | அமைச்சின் வாகனங்களின் முறையான கணிப்பீட்டுச் சபையை மேற்கொள்வதற்கு 2022.01.25 இல் குழுவொன்று நியமிக் கப்பட்டிருந்ததுடன் அது சம்பந்தப்பட்ட நடவடிக்கைகள் | அமைச்சிற்கு சொந்தமாக சகல சொத்துக்களின் கணிப்பீட்டுச் சபை அறிக்கைளும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | மேற்கொள்ளப்பட்டன. | |
| (ii) நிதிப்பிரமாணம் 104(3),(4) | (i) 2020 ஆம் ஆண்டில் 04 வாகனங்களில் 03 வாகனங்கள் விபத்திற் குற்பட்டதுடன் 03 விபத்திற்குள்ளான வாகனங்கள் 2021 ஆம் ஆண்டிலும் விபத்திற் குள்ளானதுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பரீட்சிப்பின் போது நி.பி.104(4) இன் பிரகாரம் அறிக்கை பூர்த்தியாக்கப் பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் விபத்துக்கள் தொடர்பில் விடயத்திற்கு பொறுப்பான உத்தியோகத்தர் செயற்பட நாங்கள் அறிவுறுத்தியிருந்ததுடன் விபத்துக்கள் தொடர்பான ஆரம்ப அறிக்கைகள் வழங்கப்பட்டிருக்காததுடன் முழுமையான அறிக்கைகள் வழங்கப் பட்டிருக்கவில்லை. நி.பி 104(4) இன் பிரகாரம் உடனடியாக புலனாய்வுகள் நடாத்தப் பட்டதுடன் சம்பந்தப்பட்ட அறிக்கை வழங்குவதற்கு தொடர்பான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றன | நிதிப்பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டும். |
| | (ii) நிதிப்பிரமாணம் 104(3) இன் பிரகாரம், விபத்திற்குட்பட்ட வாகனங்களின் ஆரம்ப அறிக்கைகள் ஏழு நாட்களிற்குள்ளும் நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம் பூரண அறிக்கை மூன்று மாதங்களிற்குள் சமர்ப்பிக்கப்பட வேண்டும் ஆனால், 2020 மற்றும் 2021 ஆண்டுகள் தொடர்பான குறித்த காலப் பகுதிக்குள் அந்த அறிக்கைகள் சமர்ப்பிக்கப் பட்டிருக்கவில்லை. | -மேற்படி- | -மேற்படி- |
| (iii) நிதிப்பிரமாணம் 1646 | சகல குழும வாகனங்களிற்கும் நாளாந்த ஓட்ட அட்டவணை மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கைகளும் ஒவ்வொரு மாதமும் முடிவடைந்து அடுத்த மாதத்தின் 15 நாட்களிற்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை | தாமதமில்லாமல் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகள் தொடர்புபட்ட நாளாந்த அறிக்கையை சமர்ப்பிப்தற்கு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன | நிதிப்பிரமாணங்களை பின்பற்றப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளிற்கான நாளாந்த ஓட்ட அட்டவணைகள் மற்றும் மாதாந்த பொழிப்பு அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | | |
| (ஈ) அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் 4.2.1 மற்றும் 4.2.2 ஆம் பிரிவு | குறைந்தது 3 ஆண்டுகளிற்காக எதிர்பார்த்த கொள்வனவு நடவடிக்கைகளின் பட்டியலை உள்ளடக்கிய பிரதான கொள்வனவு திட்டம் மற்றும் கொள்வனவு பட்டியல் ஒவ்வொரு கொள்வனவு ஆரம்பத்திலும் இறுதியிலும் கொள்வனவு நடவடிக்கைகளின் படிமுறைகளை கால வரிசைப் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை | அரசாங்க கொள்வனவு வழிகாட்டலின் பிரிவுகள் 4.2.1 மற்றும் 4.2.2 இற்கமைய கொள்வனவு திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. | கொள்வனவு வழிகாட்டல்கள் பின்பற்றப்பட வேண்டும்.. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 ஒதுக்கீடுகளின் முன்னேற்றத்தை மீளாய்வு செய்வதற்கு தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கை திட்டத்தில் உள்ளடக்கப்பட்ட நடவடிக்கைகளின் விரிவான முன்னேற்றம் சமர்ப்பிக்காமையால், இலக்குகளின் செயலாற்றல், அடைய எதிர்பார்க்கப்பட்டவை, குறைபாடுகள் மற்றும் அறிக்கை மட்டங்கள் என்பவற்றின் முன்னேற்றம் மதிப்பிட முடியாதுள்ளது. | அமைச்சின் செல்நடவடிக்கை திட்டம் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளின் முன்னேற்றம் 2021.12.31 இல் உள்ளவாறு 2021 வரைவு செயலாற்றல் திட்டம் மூலம் அறிக்கையிடப்பட்டுள்ளது. மேலும் பல்வேறு துறை நடவடிக்கைகளின் விரிவான முன்னேற்றத்தைக் கொண்டுள்ள அறிக்கை கணக்காய்விற்கு வழங்குவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. | ஆண்டிற்கான அமைச்சின் செயல் நடவடிக்கை திட்டத்திற்காக முன்னேற்ற அறிக்கை தயாரித்து அதனை கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 வெளிநாட்டு நிதியளிக்கப்பட்ட செயற்திட்டங்கள்**

**3.2.1 செயற்திட்ட நிறைவேற்றலில் தாமதம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **31 MW இயலளவுடைய மொறக்கொல்ல நீர் மின்சார பொறியின் நிர்மாணம்.** | | |
| • மொறக்கொல்ல நீர் மின்சார் பொறியின் நிர்மாணிப்பதற்கான செயற்திட்டம் தேசிய உப மின்நிலையத்திற்கு 31 MW இயலளவு உருவாக்கல் நோக்கத்துடன் 2014 இல் தொடங்குவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும் செயற்திட்டத்தின் வேலைகள் 3 ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் 2017 இல் தொடங்கப்பட்டிருந்தது. செயற்திட்டத்தின் மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 18,809 மில்லியனாக இருந்தது. செயற்திட்டம் உரிய நேரத்தில் தொடங்காமையால், பெறப்பட்ட கடனிற்காக கடப்பாட்டு கட்டணங்களாக ஏறத்தாழ ரூபா 28 மில்லியல் (ஐ.அ.டொலர் 177,931) செலுத்த வேண்டியிருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 5,806 மில்லியன் செலவழிக்கப் பட்டிருந்ததுடன் பௌதீக முன்னேற்றம் 30 சதவீமான மெதுவான முன்னேற்றத்தைக் கொண்டிருந்தது. | 2020 மற்றும் 2021 ஆண்டில் நிலவிய கோவிட் 19 நோய்த் தொற்று காரணமாக, திட்டமிட்டவாறு செயற் திட்டத்தின் பௌதீக முன்னேற்றத்தை அடைவதற்கு சாத்திய மற்றிருந்ததுடன் செயற்திட்டமானது 2023 நவம்பர் 30 அளவில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப் பட்டுள்ளதுடன் நிர்மாண வேலைகள் தொடருகின்றன. | குறித்த காலப் பகுதிக்குள் செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| • 2020 ஆம் ஆண்டிலிருந்து 2021 ஆம் ஆண்டு வரை இந்த செயற்திட்டத்தின் 3 சதவீத மெதுவான பௌதீக முன்னேற்றம் முன்னேற்றமடைந்து 2023 நவம்பர் 30 அளவில் உற்பத்தி நடவடிக்கைகளை தொடங்குவதற்கு எதிர்பார்க்கப் பட்டது. எவ்வாறாயினும், அந்த இலக்கினை அடைவதற்கான சாத்தியத்தன்மை கணக்காய்வில் மதிப்பிட முடியாதுள்ளது. | இலங்கை மின்சா சபையினுடைய செயற்திட்ட முகாமைத்துவக் குழு குறித்த காலப் பகுதிக்குள் பூர்த்தியாக்குவதற்கு தேவையான அதிகூடிய முயற்சிகளை எடுத்திருந்தது. | குறித்த காலப் பகுதிக்குள் செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| **(ஆ) தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் மின்வலு வினைத்திறன் அபிவிருத்தி செயற்திட்டம்.** <br>மேல், மாத்திய மற்றும் வடமத்திய மாகாணங்களில் உபநியை இயலளவை அதிகரிப்பதற்கும் பரிமாற்ற சேதங்களை குறைப்பதற்கும் அமுல்ப்படுத்தப்படுகின்ற செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 37,285 மில்லியனாக இருந்தது. இது 2015 சனவரியில் தொடங்கி 2018 சனவரி அளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப் பட்டிருந்தது. இருந்த போதிலும் வேலைகள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏறத்தாழ 48 சதவீதமாக இருந்ததுடன் ஏற்கனவே 4 ஆண்டுகள் தாமதப்பட்டிருந்த இந்த செயற்திட்டம் மீது செலவழித்த தொகை ரூபா 15,888 மில்லியனாக இருந்தது. | செயற்திட்டமானது 2021 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்குவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும், 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் நிலவிய கோவிட் 19 நோய் தொற்று மற்றும் செயற்திட்டத்திற்காக தேவைப்பட்ட காணிகள் சுவீகரிப்பதில் தாமதம் மற்றும் சமூக பிரச்சனைகளால் எழுந்தமை போன்றன காரணமாக திட்டமிட்டவாறு இலக்கை அடைய முடியவில்லை. நிர்மாணங்கள் திட்டமிடப்பட்டவாறு பட்டியலிடப் பட்ட திகதியில் தொடங்க முடியவில்லை. <br>இலங்கை மின்சார சபை செயற்திட்ட முகாமைத்துவ பிரிவின் பிரகாரம், அந்த செயற்திட்டம் 2023 திசெம்பர் அளவில் பூர்த்தியாக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. | குறித்த காலப் பகுதிக்குள் செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| **(இ) 35 MW இயலளவுடன் மேட்டுநிலப்பரப்பு நீர் மின்சார செயற்திட்டம்.** <br>35 MW இயலளவுடன் மேட்டுநில நீர் மின்சார செயற்திட்டத்தின் நிர்மாணத்திற்கான மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 9,424 மில்லியாக உள்ளதுடன் செயற்திட்டமானது 2013 ஆகஸ்ட் மாதத்தில் தொடங்கி 2017 ஆகஸ்ட் மாதமளவில் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. <br>எவ்வாறாயினும், ஏற்கனவே 4 ஆண்டுகள் தாமதப்பட்டிருந்தமை காரணமாக 2021 திசெம்பர் 31 அளவில் இந்த செயற்திட்ட வேலைகள் பூர்த்தியாக்குவது சாத்தியமற்றிருந்ததுடன் இந்த செயற்திட்டத்தில் உரிய கடன் தொகை பயன்படுத்தாமையால் 2019 திசெம்பர் 16 அளவில் சீனாவின் கைத்தொழில் மற்றும் வர்த்தக வங்கியிற்கு (ICBC) தண்டப்பணமாக (கடப்பாட்டுக் கட்டணங்களாக) ஐ.அ.டொலர் 1,197,199.67 செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்காக தேவையான காணி சுவீகரிப்பதில் தாமதம், சமூக பிரச்சனைகள் எழல் மற்றும் 2016 இல் இலங்கை மின்சார சபையின் கணக்காய்வு செய்யப்பட்ட இறுதி அறிக்கையை விடுவிப்பதில் ஏற்பட்டதாமதம் மற்றும் ICBC வங்கி நிதியளிப்பதை தற்காலிகமாக நிறுத்தல் போன்ற காரணங்கள் செயற்திட்டம் தாமதமடைய பிரதான காரணங்களாக இருந்தது. <br><br>2018 சனவரியில் கடன் உடன்படிக்கை காலாவதியாவதுடன் மிகுதி செயற்திட்ட காலப் பகுதிக்கான நிதி வசதியளிப்பது கடினம் மற்றும் 2020 இலிருந்து இலங்கையில் கோவிட் 19 நோய் தொற்று காரணமும் செயற்திட்ட பூர்த்தியாக்கலை பாதித்திருந்ததுடன் செயற்திட்ட பூர்த்தியாக்கல் திகதி நீடிக்க வேண்டியிருந்ததுடன் கடன் | குறித்த காலப் பகுதிக்குள் செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | உடன்படிக்கையும் நீடிக்கப் பட்டிருந்ததுடன் தண்டப்பணமும் (கடப்பாட்டுக் கட்டணம்) செலுத்தப்பட்டிருந்தது.<br><br>2022 சனவரியில் நீர் மின்சார பொறி தொடங்கப்பட்டு தேசிய மின்நிலையத்திற்கு இணைக்கப் பட்டதுடன் தற்போது அதன் முழு இயலளவும் செயற்படுத்தப்படுகின்றது. | |

### 3.2.2 வெளிநாட்டு உதவியளிக்கப்பட்ட செயற்திட்டங்களின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மின்வலு உருவாக்கல் ஊடாக புதுப்பிக்கக்கூடிய மின்வலு உருவாக்கும் நோக்கத்துடன் நயினாதீவு, அனலைதீவு மற்றும் நெடுந்தீவில் போன்ற மூன்று சிறிய தீவுகளிலும் உயர் புதுப்பிக்கக்கூடிய மின்வலு முறைமை கட்டியொழுப்புதற்கான செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயம் ரூபா 1,980 மில்லியனாக உள்ளதுடன் செயற்திட்டமானது 2019 இல் தொடங்கி 2022 இல் பூர்த்தியாக்குவதற்கு பட்டியலிடப்பட்டது. எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 வரையும் கொள்வனவு நடைமுறை செய்யப்பட்டிருக்கவில்லை. | இந்திய அரசாங்கத்தால் செய்யப்பட்ட வேண்டுகை பிரகாரம், இந்திய அரசாங்கத்தின் கடன் (25%) மற்றும் இந்திய மானியம் 75%) என்பவற்றின் கடன் தொடரின் கீழ் இந்த செயற்திட்டம் மேற்கொள்வதற்கு அமைச்சரவை தீர்மானித்திருந்தது. | குறித்த காலப் பகுதிக்குள் செயற்திட்டங்களை பூர்த்தியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2017 திசெம்பர் 21 ஆந் திகதிய 02/2017 ஆம் இலக்க சொத்து முகாமைத்துவ சுற்றறிக்கை பிரகாரம், அரசாங்கத்திற்கு சொந்தமான அரசாங்க நிறுவனங்களால் பயன்படுத்தப்பட்ட ஒவ்வொரு வாகனங்களும் அந்த நிறுவனத்தின் பெயரில் பதிவு செய்ய வேண்டும். எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்வலு அமைசசின் நிதிக்கூற்றில் உள்ளடக்கப்பட்ட ரூபா 365,700,000 பெறுமதியுடைய 42 வாகனங்களில் | | |

| | | |
|---|---|---|
| ரூபா 227,700,000 பெறுமதியுடைய 19 வாகனங்கள் அமைச்சின் இருப்பில் பௌதீக ரீதியாக இருக்கவில்லை. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன. | | |
| (i) ரூபா 94,000,000 பெறுமதியான 03 வாகனங்கள் கையளிக்கப்படாமல் ஊடக அமைச்சால் பயன் படுத்தப்பட்டிருந்தது. | மின்சக்தி அமைச்சிற்கு அந்த வாகனங்களை திரும்பப் பெறுவதற்கு ஊடக அமைச்சிற்கு கடிதம் அனுப்பப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) கண்டி உயர் நீதி மன்றத்தில் நிலுவையிலுள்ள HC 40/16 ஆம் இலக்க கிரிமினல் வழக்கு தொடர்புபட்ட வழக்கிலுள்ள ரூபா 8,500,000 பெறுமதியுடை JZ-6200 ஆம் இலக்க வாகனம் இந்த வழக்கு முடிவதற்கு முன்னரே முறையாக கையளிக்காமல் இலங்கை அனுசக்தி அதிகார சபைக்கு கையளிக்கப்பட்டிருந்தது. | வழக்கு முடிவவடைந்த பின்னர் இந்த வாகனம் இலங்கை அனுசக்தி அதிகார சபைக்கு கையளிக்கப்படும். | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (iii) ரூபா 125,200,000 பெறுமதியுடைய 15 வாகனங்களில், 04 வாகனங்கள் சூரிய சக்தி, காற்றலை மற்றும் நீர் மின்சார உருவாக்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு தற்காலிகமாக கையளிக்கப் பட்டிருந்ததுடன் மிகுதின 11 வாகனங்களைக் கையளிப்பதற்கு இராஜாங்க அமைச்சு செயலாளர் 2021 ஏப்ரல் 07 இல் විදුලි/ පු/වා 94/2020 ஆம் இலக்க கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டது. அந்த வாகனங்களின் சட்ட ரீதியான உரிமையாண்மை கணக்காய்வு திகதி வரையும் மாற்றப்பட்டிருக்கவில்லை. | 2021.04.07 ஆந்திகதிய கடிதம் மூலம் முறையாக கையளிப்பதற்கு பூர்த்திசெய்த உரிய ஆவணங்களுடன் சேர்த்து 11 வாகனங்கள் சூரிய சக்தி, காற்றலை மற்றும் நீர் மின்சார உருவாக்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு கையளிக்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு மின்சார சபைக்கு சொந்தமான KI-1239 ஆம் இலக்க வாகனம் முறைப்படி பதிவு உரிமைகளை கையேற்காமல் மின்சக்தி அமைச்சால் பயன்படுத்தப் படுகின்றன என்பது அவதானிக்கப்பட்டது. | அந்த KI-1239 ஆம் இலக்க வாகனம் சிரேஸ்ட உதவி செயலாளரின் (கொள்வனவு) பயன்பாட்டிற்காக தற்காலிகமாக வழங்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) நீர் பாசன மற்றும் நீர் முகாமைத்துவ அமைச்சின் உமாஓயா செயற்திட்டத்திற்கு சொந்தமான KI-3991 ஆம் இலக்க கார் முறைப்படி கையளிக்கப்படாமல் மின்சக்தி அமைச்சால் எடுக்கப் பட்டிருந்ததுடன் சொல்லப்பட்ட வாகனம் சூரிய சக்தி, காற்றலை மற்றும் நீர் மின்சார உருவாக்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சிற்கு வழங்கப்பட்டிருந்தது. | உமாஓயா செயற்திட்டத்திற்கு சொந்தமான KI-3991 ஆம் இலக்க வாகனம் மின்சக்தி அமைச்சிற்கு தற்காலிகமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் இந்த அமைச்சால் சூரிய சக்தி, காற்றலை மற்றும் நீர் மின்சார உருவாக்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சு செயலாளருக்கு தற்காலிகமாக வழங்கப்பட்டது. | சுற்றறிக்கைக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 அரச உத்தியோகத்த்களின் பிணைவைப்பு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 880 இன் பிரகாரம், அரச பணம் பெறுதல் அல்லது பொறுப்புடையவர், முத்திரை வருமானம் அல்லது பொருட்கள், அரசாங்க பண பங்கீடு அல்லது முத்திரை அல்லது பெருட்கள் வழங்கல் அதிகாரங்களை கைளித்தல் அல்லது அரச கணக்குகள், உறுதிசீட்டுகள் தொடர்புபட்ட வேலைகளின் கீழ் நிர்வாக பொறுப்பு அல்லது கையளிப்பு, காசோலைகள் கையொப்பமிடல் மற்றும் அரச கடமைகள் என்பவற்றிற்கு பொறுப்புடையவர் அவர்களுடைய கடமைகளை நேர்மையாக மேற்கொள்வதற்கு அரச உத்தியோகபூர்வ பிணைமுறி கட்டளைின் பிரிவு 612 இற்கமை கட்டாயமாக பிணை முறி செலுத்த வேண்டும். மேலும், நிதிப் பிரமாணம் 881 இன் பிரகாரம், அத்தகைய | 12 அமைச்சு உத்தியோகர்தர்கள் பரஸ்பர உத்தரவாத மன்றத்தில் தற்காலிக உறுப்புரிமையை வழங்கப்பட்டிருந்ததுடன் ஏனைய சம்பந்தப்பட்ட உத்தியோக த்தர்களிற்கு அதே உறுப்புரிமையை வழங்குவதற்கு தேவையான ஒழுங்குகள் செய்யப்படும். | உரிய உத்தியோகத்தர்களிற்கு உறுப்புரிமையை பெறுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

பதவிகளிற்கு அவர்களை நியமித்த திகதியிலிருந்து இரண்டு மாதங்களிற்குள் பிணைமுறியை உத்தியோகத்தர் வைப்புச் செய்ய வேண்டும். இருந்த போதிலும், அமைச்சானது பிணைமுறி பதவிக்குரிய 7 உத்தியோகத்தர் களிற்காக 2022 பெப்ரவரிலேயே பரஸ்பர உத்தரவாத மன்றத்தின் தற்காலிக உறுப்புரிமையை பெற்றிருந்ததுடன் சம்பந்தப்பட்ட சகல உத்தியோகத்தர்களிற்குரிய பிணைமுறி தொடர்பான நடைமுறை பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 நட்டங்கள் மற்றும் சோதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| நிதிப்பிரமாணம் 104(4) இன் பிரகாரம், 2008 இலிருந்து 2020 வரை 08 வழக்குகள் மீது ரூபா 1,584,439 தொகைான நட்டங்கள் அறவிட வேண்டியிருந்தது. ரூபா 1,518,439 இற்காக தொடரப்பட்ட 07 வழக்குகள் 10 ஆண்டுகளிற்கு மேல் பழமை வாய்ந்தாக இருந்தன. | விபத்திற்குள்ளான 07 வாகனங்களில், 05 விபத்துக்கள் கைளரவ சட்டமா அதிபதிபர் நாயகத்தின் ஆலோசனையுடன் புலனாய்வு செய்யப் படுகின்றதுடன் ஒரு விபத்தின் சேதங்களை அறவிட வேண்டியிருந்த ஒரு நபர் தற்போது வெளிநாட்டில் உள்ளார் சொல்லப்பட்ட நபருடைய ஓய்வூதிய பணிக் கொடையை அறவிடுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. மேலும், விபத்துடன் தொடர்புபட்ட நி.பி. 104(4) இன் பிரகாரம் முழு அறிக்கைக்காக அமைச்சு செயலாளரின் அனுமதி 2022.02.07 இல் பெறப்பட்டதுடன் இதன்படி, நட்டங்கள் தொடர்புபட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. | உரிய தரப்பினர்களிடமிருந்து அந்த நட்டங்கள் அறவிடப்பட வேண்டும். |

**3.6 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) இலங்கையினுடை தேசிய சக்தி கொள்கை மற்றும் உபாயத்தின் அமுலாக்கல் பற்றி பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன. | | |
| (i) புதுப்பிக்கக்கூடிய சக்தி செயற்திட்டங்களின் புதுப்பிக்கக்கூடிய சக்தியின் பங்களிப்பை அதிகரிப்பதற்கு மத்திய ஒருங்கிணைப்பு பொறிமுறையொன்று அனுமதிக்காக நீண்ட காலம் எடுப்பதை குறைக்கப்படும் என்பது தேசிய கொள்கை நிலையாக இருந்த போதிலும் மீளாய்வாண்டு இறுதிவரையும் போதிய படிமுறைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | புதுப்பிக்கக்கூடிய சக்தி செயற் திட்டங்களின் அனுமதிக்காக தேவைப்பட்ட காலத்தை குறைப்பதற்கு இலங்கை மின்சார சபைக்கான திருத்தங்கள் அமுலாக்குதல் மற்றும் மின்சார பொதுக் கொள்கை வழிகாட்டலுக்கான திருத்தங்கள் மற்றும் சூரிய சக்தி அதிகாரசபை என்பவற்றின் மூலம் 2021 மற்றும் 2022 இல் தேவையான அடிப்படை படிமுறைகள் எடுக்கப்பட்டிருந்தது.<br>தேவையான அறிவுறுத்தல்கள் செய்யப்பட்ட இந்த திருத்தப்பட்ட மின்சாரப் பட்டியல் பாராளுமன்றத்தில் அட்டவணையிடுவதற்காக 2022.05.04 இல் சபாநாயகர் அலுவலகத்திற்கு கையளிக்கப்பட்டிருந்தது.<br>மேலும், இந்த புதுப்பிக்கக் கூடிய சக்தி செயற்திட்டத்தின் நோக்கெல்லை தொடர்பான முழுச் செயற்பாடும் சூரிய சக்தி, காற்றலை மற்றும் நீர் மின்சார உருவாக்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் செய்ய வேண்டும். | கொள்கையை வினைத்திறனாக அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ii) காற்றலை, சூரிய சக்தி மற்றும் புதுப்பிக்கக்கூடிய சக்தி வளங்களின் வினைத்திறனான பயன்படுத்தலை செய்யும் நோக்கில் வினைத்திறனான தொழில்நுட்ப உள்ளடக்க கொள்கை உள்ளடங்கிய போதிலும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | தேவையான கொள்கை பங்களிப்பு வழங்கல், மின்சார சபை சட்டம் மற்றும் மின்சார பொது கொள்கை வழிகாட்டல் என்பவற்றின் திருத்தம் 2021-2022 ஆண்டுகளில் செய்யப்பட்டிருந்தது.<br>அந்த புதுப்பிக்கக் கூடிய சக்தி செயற்திட்டத்தின் நோக்கெல்லை தொடர்பான | கொள்கையை வினைத்திறனாக அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முழுச் செயற்பாடும் சூரிய சக்தி, காற்றலை மற்றும் நீர் மின்சார உருவாக்கல் செயற்திட்ட அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் கீழ் செய்ய வேண்டும். | |
| (iii) மேலும், ஒவ்வொரு இரண்டு ஆண்டுகளிலும் இந்த கூற்றில் உள்ளடக்கப்பட்ட செயலாற்றல் கால எல்லை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென குறிப்பிடப்பட்ட போதிலும், 2021 ஆகஸ்ட் 09 இல் உள்ளவாறு 02 ஆண்டுகளை விஞ்சிய இந்த கொள்கை கூற்றில் திருத்தம் செய்யப்பட்டிருக்கவில்லை. | கடந்த இரண்டு ஆண்டுகளில் இங்கு திருத்தங்களை செய்வதற்கு எவ்வித சந்தர்ப்பமோ அல்லது இடமோ இருக்கவில்லை, ஆனால் அடுத்த ஆண்டில் மீளாய்வொன்றை நடாத்த வேண்டிய தேவை இருக்குமாயின் இதன்படி, முறையாக திருத்தம் செய்யப்ப்டும். | கொள்கையை வினைத்திறனாக அமுலாக்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) தேசிய சக்தி கொள்கை மற்றும் உபய கூற்றில் உள்ளடக்கப்பட்ட ஒவ்வொரு நிறுவனங்களிற்குமான அடைதலிற்கான கால எல்லை மற்றும் கொள்கை நோக்கங்களிறகாக பெறுப்புடைய செயலாற்றல் கால எல்லைக் கூற்று இலக்குகள் மற்றும் குறித்த கொள்கை இலக்குகளிற்கு இணைக்க முடிந்திருந்தது. இதன்படி, மின்சக்தி அமைச்சு பின்வரும் இலக்குகள் மற்றும் மின்சக்தி பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் புதுப்பிக்கக்கூடி சக்தியின் பங்களிப்பை அதிகரிக்கும் நோக்கிலும் எல்லை நிர்ணயத்தையும் அடைந்திருந்த பேதிலும், அந்த பொறுப்புகள் போதியளவு நிறைவேற்றப் பட்டிருக்கவில்லை என்பது அவதானிக்கப்பட்டது. | | |
| (i) 2021 இன் இறுதியில் நாட்டின் பிராந்தியங்களில் இருக்கின்ற மின்சார குறுக்கு எல்லை பரிமாற்றங்களின் பொருளாதார சாத்தியவள கற்கை மற்றும் ஆவணம் | நாட்டின் பிராந்தியங்களில் இருக்கின்ற மின்சார குறுக்கு எல்லை பரிமாற்றங்களின் பொருளாதார சாத்தியவள கற்கை செற்பாட்டில் உள்ளது. | குறிப்பிடப்பட்டவாறு கொள்கையில் உள்ளடக்கப்பட்ட இலக்குகள் மற்றும் எல்லைகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) 2019 இன் இறுதியளவில் மின்சக்தி துறையின் செயலாற்றல் மீது பாரிய தாக்கத்தை உருவாக்கக்கூடிய உள்ளக மற்றும் வெளியக தேவையற்ற விடயத்திற்குள் செல்வதற்கு போதிய பிரதான உடமையாளர்களுடன் ‘‘மின்சக்தி | 2020– 2021 வரையான கடந்த இரண்டு ஆண்டுகளில் நிலவிய ஆபத்தான நிலைமையால் கூட்டங்கள் மற்றும் வேறு தவிர்க்க முடியாத காரணங்களால் விளைந்த கஸ்ரங்கள் காரணமாக | குறிப்பிடப்பட்டவாறு கொள்கையில் உள்ளடக்கப்பட்ட இலக்குகள் மற்றும் எல்லைகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| துறை ஆபத்து மதிப்பீட்டுச் சபை” என்ற பெயருடை உயர் மட்ட நியமக் குழுவொன்றைத் தாபித்தல் | கலந்துரையாடலுடன் சேர்த்து அந்த கஸ்ரமான பணிகளை மேற்கொள்வதற்கு தற்போது தேவையான படிமுறைகள் எடுக்கப்படுகின்றன. | |
| (iii) பொது இடங்கள் ஒளியூட்டல் உள்ளடங்கலாக கிராம, நகர மற்றும் பிரதான வீதிகளிற்கான ஒளியூட்டல் நியமம் 2020 இல் அறிமுகப்படுத்த வேண்டியிருந்ததுடன் இது கட்டாயமாக அமுலாக்க வேண்டியிருந்தது. | 2019 ஆம் ஆண்டிலிருந்து இந்த அமைச்சு அமைச்சு செயலாளரின் முயற்சீன் கீழ் உள்ளூரராட்சி அமைச்சு, இலங்கை மின்சா சபை இலங்கை மின்சார தனியார் கம்பனி மற்றும் நிலை பெறான சக்தி அதிகாரசபை என்பன தொடர்புபட்ட அலுவல்கள் சேகரிக்கப் பட்டதுடன் இது தொடர்பில் கூட்டங்கள் நடாத்தப்பட்டது. இந்த ஆண்டின் போது சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உடன்படிக்கை மீது இடங்கள் ஒளியூட்டலிற்காக ஒளியூட்டல் நியமங்கள் அறிமுகப் படுத்துவதற்கு தேவையான வேலைகள் செய்யப்படுகின்றன. | குறிப்பிடப்பட்டவாறு கொள்கையில் உள்ளடக்கப்பட்ட இலக்குகள் மற்றும் எல்லைகளை அடைவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அமைச்சின் அனுமதிக்கப்பட்ட பதவியணி 104 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணி 86 ஆக இருந்தது 18 வெற்றிடங்கள் அவதானிக்கப்பட்டது. | சிரேஸ்ட மட்ட வெற்றிடங்களிற்கு இடையில் பணிப்பாளரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு உடனடியாக பொருத்தமான உத்தியோகத்தர் ஒருவர் நியமிக்க வேண்டுமென அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சால் அறிவிக்க ப்பட்டிருந்ததுடன் 2020.07.07 இலிருந்து பணிப்பாளரின் (திட்டமிடல்) கடமைகளைச் செய்வதற்கு உத்தியோத்தர் ஒருவரை நியமிப்பதற்கு பொதுச் சேவைகள் ஆணைக்குழு ஒழுங்கு செய்திருந்தது.<br><br>மேலும், பொது நிர்வாக அமைச்சு உள்ளக கணக்காய்வாளர் பதவி, உதவிப் பணிப்பாளர், மேலதிக செயலாளர் மற்றும் சிரேஸ்ட | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | உதவிச் செயலாளர் (நிர்வாகம்) போன்ற பதவிகளிற்காக உத்தியோகத்தரகளை நியமிப்பது பற்றி அறிவிக்கப்பட்டிருந்தது.<br><br>அத்துடன், பிரதம கணக்காளர் மற்றும் உதவிச் செயலாளர் (நிர்வாகம்) என்பன தற்போது நிரப்பப்பட்டுள்ளது. | |
| (ஆ) | 2022 யூன் 01 வரையும் வெற்றிடமாக இருக்கின்ற மேலதிக செயலாள், சிரேஸ்ட உதவி செயலாளர் (நிர்வாகம்), பணிப்பாள் நாயகம், உதவி பணிப்பாளர் ' மற்றும் உள்ளக கணக்காய்வாளர் போன்ற 8 பிரதான சிரேஸ்ட மட்ட வெற்றிடங்கள் மீளாய்வாண்டின் போது அவதானிக்கப்பட்டன, | -மேற்படி- | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | அமைச்சின் மூன்றாம் தர மட்டத்தில் அனுமதிக்கப்பட்ட பதவியணியின் எண்ணிக்கை 4 ஆக இருந்ததுடன் அந்த மட்டத்தில் நிர்வாக உத்தியோகத்தர், 2 மொழிபெயர்ப்பாளர் பதவிகள் மற்றும் ஒரு தகவல் மற்றும் பரிவ்த்தனை தொழில்நுட்ப உத்தியோகத்தர் போன்ற சகல பதவிகளும் 2020 இலிருந்து தற்போது வரையும் வெற்றிடமாக உள்ளன. | மூன்றாம் தர மட்டத்தில் நிவாக உத்தியோகத்தர் மற்றும் மொழிபெயர்ப்பாளர் போன்ற இரண்டு பதவிகளிற்காக உத்தியோகத்க்களை ஒதுக்குவதற்கு பொதுச் சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சிற்கு அறிவிப்பதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. 2021.09.04 இலிருந்து அல்லது வெற்றிடம் நிரரப்பும் திகதிவரை அற்லது முதலிலிருந்து ஒரு ஆண்டிற்கு மேலாக வெற்றிடமாகவுள்ள தகவல் மற்றும் பரிவர்த்தனை தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவியின் கடமைகளை செய்வதற்கு நியமனங்களை மேற்கொள்ள பொது நிர்வாக, மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு அனுமதித்திருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டின் போது அமைச்சின் அனுமதிக்கப்பட்ட பதவியணியில் இருக்காத இலங்கை மின்சார சபைக்கு இணைக்கப்பட்ட 14 ஊழியர்கள் 2019 ஆம் ஆண்டிலிருந்து அமைச்சு பதவியணியில் உள்ளனர். | கௌரவ அமைச்சரின் அறிவுறுத்தல் பிரகாரம், இலங்கை மின்சார சபைக்கு இணைக்கப்பட்ட தரவுநிலை செயற்பாட்டாளர், ஒருங்கிணைப்பாளர், எழுதுனர், தட்டெழுத்தாளர், அலுவலக உதவிளர், பாதுகாப்பாளர் மற்றும் சாரதிகள் என்போர் அமைச்சின் பதவியணி உத்தியோகத்தர்களாக நியமிக்கப்பட்டிருந்தனர். | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் இணங்கியொழுக வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | மீளாய்வு காலத்தின் போது அமைச்சின் அனுமதிக்கப்பட்ட பதவியணியிலிருந்து ஒரு பகுதி இலங்கை மின்சார சபைக்கு இணைக்கப்பட்ட 18 ஊழியர்கள் அமைச்சில் வேலைக்கமர்த்தப்பட்டுள்ளதுடன் சில உத்தியோதகத்தர்கள் 2009 இலிருந்து அமைச்சிற்கு இணைக்கப்பட்டுள்ளனர். | அமைச்சினுடைய ஊடக பிரிவில் இருக்கின்ற பதவியின் கடமைகளை மேவுதல், தரவு செயற்படுத்துநர் பதவி போன்ற பதவிகளின் சேவை தேவையின் அடிப்படையில் ஒதுக்கப் பட்டிருந்ததுடன் ஊடக பிரிவின் கடமைகளிற்கும் அத்தியாவசிய கடமைகளை செய்வதற்கும் அவர் ஒதுக்கப்பட்டிருந்தது.<br><br>இலங்கை மின்சார சபைக்கு இணைக்கப்பட்ட 02 அலுவலக உதவியாளர்கள் இந்த அமைச்சிற்கு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களான இலங்கை மின்சார சபையின் பாதுகாப்பு பிரிவிலிருந்து அமைச்சின் கீழ் எவ்வித பாதுகாப்பு பிரிவும் இருக்கவில்லை. இந்த அமைச்சின் பாதுகாப்பு தொடர்பில் அமைச்சிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் ஒதுக்கப்பட்டிருந்தனர். | 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையுடன் இணங்கியொழுக வேண்டும். |